## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-4 - மையார்
### (ஆழ்வார் திருமாலைச் சங்குசக்கரங்களுடன் காண வேண்டிக் காதலுடன் கூப்பிட்டு அங்ஙனமே பெற்றமையை உகந்து அருளிச் செய்தல்)

3590 * மையார் கருங்கண்ணி * கமல மலர் மேல்
செய்யாள் * திருமார்வினில் சேர் * திருமாலே! **
வெய்யார் சுடராழி * சுரிசங்கம் ஏந்தும்
கையா! * உன்னைக் காணக் * கருதும் என் கண்ணே 1

3591 கண்ணே! உன்னைக் * காணக் கருதி * என் நெஞ்சம்
எண்ணே கொண்ட * சிந்தையதாய் நின்றியம்பும் **
விண்ணோர் முனிவர்க்கு * என்றும் காண்பரியாயை *
நண்ணாதொழியேன் என்று * நான் அழைப்பனே 2

3592 அழைக்கின்ற அடிநாயேன் * நாய் கூழை வாலால் *
குழைக்கின்றது போல * என்னுள்ளம் குழையும் **
மழைக்கு அன்று குன்றம் எடுத்து * ஆநிரை காத்தாய்! *
பிழைக்கின்றது அருள் என்று * பேதுறுவனே 3

3593 உறுவது இதுவென்று * உனக்கு ஆள்பட்டு * நின்கண்
பெறுவது எதுகொல் என்று * பேதையேன் நெஞ்சம் **
மறுகல் செய்யும் * வானவர் தானவர்க்கு என்றும் *
அறிவதரிய * அரியாய அம்மானே! 4

3594 அரியாய அம்மானை * அமரர் பிரானை *
பெரியானைப் * பிரமனை முன் படைத்தானை **
வரிவாள் அரவினணைப் * பள்ளி கொள்கின்ற *
கரியான் கழல் காணக் * கருதும் கருத்தே 5

3595 கருத்தே! உன்னைக் * காணக் கருதி * என் நெஞ்சத்து
இருத்தாக இருத்தினேன் * தேவர்கட்கெல்லாம்
விருத்தா! ** விளங்கும் சுடர்ச் சோதி * உயரத்
தொருத்தா! * உன்னை உள்ளும் * என்னுள்ளம் உகந்தே 6

3596 உகந்தே உன்னை * உள்ளும் என் உள்ளத்து * அகம்பால்
அகந்தான் அமர்ந்தே * இடங்கொண்ட அமலா! **
மிகுந்தான் அவன் மார்வகலம் * இருகூறா
நகந்தாய் * நரசிங்கமதாய உருவே! 7

3597 உருவாகிய * ஆறுசமயங்கட்கெல்லாம் *
பொருவாகி நின்றான் * அவன் எல்லாப் பொருட்கும் **

அருவாகிய ஆதியைத் * தேவர்கட்கெல்லாம் *
கருவாகிய கண்ணனைக் * கண்டு கொண்டேனே 8

3598 கண்டு கொண்டு * என் கண்ணிணை ஆரக் களித்து *
பண்டை வினையாயின * பற்றோடறுத்து **
தொண்டர்க்கு அமுதுண்ணச் * சொல்மாலைகள் சொன்னேன் *
அண்டத்தமரர் பெருமான் * அடியேனே 9

3599 அடியான் இவன் என்று * எனக்கு ஆரருள் செய்யும்
நெடியானை * நிறைபுகழ் அஞ்சிறைப் * புள்ளின்
கொடியானை ** குன்றாமல் * உலகம் அளந்த
அடியானை * அடைந்து அடியேன் உய்ந்தவாறே 10

3600 * ஆறா மதயானை * அடர்த்தவன் தன்னை *
சேறார் வயல் * தென்குருகூர்ச் சடகோபன் **
நூறே சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்தும் *
ஏறே தரும் * வானவர் தம் இன்னுயிர்க்கே 11

**அடிவரவு:** மை கண் அழை உறுவது அரி கருத்தே உகந்து உரு
கண் அடியான் ஆறா இன்னுயிர்